உடன் செய்து தர ஆணையிட்டுள்ளேன். அரசு அலுவலர்களுக்கு முழு பாதுகாப்பு வழங்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கொலை வழக்கில் சம்பந்தப்பட்டவர்களை விரைவில் கண்டுபிடித்து கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். கருவூலத் துறை அலுவலர்களும் மற்ற துறைகளைச் சார்ந்த அலுவலர்களும் தற்போது அமைதி காத்து, அலுவலகம் செல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கொலை சம்பவம் போன்றே கேரள மாநிலம் திருச்சூரில் சில சம்பவங்கள் சமீபத்தில் நடைபெற்றுள்ளதாக காவல் துறையினருக்கு தகவல் கிடைத்துள்ளது. கோவை கொலைகளிலும் இவர்களுக்கு தொடர்பு உள்ளதா என்று அறிய காவல் படை ஒன்று திருச்சூர் விரைந்துள்ளது. மேற்கொண்டு இது குறித்த விவரங்கள் தெரிந்தவுடன் அவைக்குத் தெரிவிக்கிறேன்.

4. அறிவிப்புகள்

பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்ற, நிர்வாகக் குழுக்களுக்கு, உறுப்பினர்கள் தேர்வு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. கீழ்க்கண்ட பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றக் குழு (Senate) மற்றும் நிர்வாகக் குழு (Board of Management) ஆகியவற்றிற்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் பெற வேண்டுமென்ற கோரிக்கைகள் வந்துள்ளன.

மதுரை காமராஜர் பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழுவிற்கு நான்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். பதவிக் காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டுகளாகும்.

அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழுவிற்கு மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பதவிக் காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து 5—12—1992 வரை ஆகும்.

பாரதிதாசன் பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழுவிற்கு இரண்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பதவிக் காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டுகளாகும்.

[பேரவைத் தலைவர்] [1991 செப்டம்பர் 25

பாரதியார் பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழுவிற்கு இரண்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பதவிக் காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டுகளாகும்.

அழகப்பா பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழுவிற்கு ஒரு உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பதவிக் காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டுகளாகும்.

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழுவிற்கு இரண்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பதவிக் காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டுகளாகும்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாகக் குழுவிற்கு ஒரு உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பதவிக் காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டுகளாகும்.

மேற்குறிப்பிட்ட பல்கலைக் கழகங்களின் ஆட்சிமன்றக் குழுவிற்கு இப்பேரவையில் இருந்து தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக் காலம் மூன்று ஆண்டுகள் என்று இருப்பினும், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஏதாவதொரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால் அந்த நாளோடு இப்பதவிகளின் காலம் முடிவடையும்.

எனவே, வேட்பாளர்கள் நியமனத் தாள்களை *27—9—1991* வெள்ளிக்கிழமை பிற்பகல் *3-00* மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத் தாள்கள் *28—9—1991* சனிக்கிழமை பிற்பகல் *3-00* மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் *30—9—1991* திங்கட்கிழமை பிற்பகல் *3-00* மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் *3—10—1991* வியாழக்கிழமை காலை *10-00* மணிக்கும பிற்பகல் *1-00* மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் இருக்கும் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்,